முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 22 ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 – ஸ்ரீ குரோதி வருடம் - ஐப்பசி திங்கள் 5 ம் நாள்)

இடைநிலை மனு எண்.7/2024
அசல் வழக்கு எண்.808/2021

S.வசந்தி,
உரிமையாளர்,
ஜெய் ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் ..மனுதாரர்/வாதி

// எதிர் //

செந்தில்வேல்,
பங்குதாரர்,
ஸ்ரீ செந்தில்வேல் சைசிங் மில்ஸ், ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

14.02.2024 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 3, விதி 2 மற்றும் பிரிவு 151 ன் படி மனுதாரர்/வாதிக்கு பொது அதிகார முகவர் சாத்தப்பன் என்பவரை நியமிக்கக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 30.09.2024 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.V.R.பசுபதி, வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.R.சுரேஷ், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

அசல் வழக்கில் மனுதாரர்/வாதிக்கு பொது அதிகார முகவர் சாத்தப்பன் என்பவரை நியமிக்கக் கோரி மனுதாரரால் உ.வி.மு.ச. கட்டளை 3, விதி 2 மற்றும் பிரிவு 151 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து தொகையை வசூல் செய்ய வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரருக்கு அதிக வயதான காரணத்தினாலும், நோயினாலும் நேரடியாக நீதிமன்றத்திற்கு ஆஜராக இயலவில்லை என்றும், மனுதாரருக்கு சாத்தப்பன் என்ற பொது அதிகார முகவரை நியமித்து 19.09.2023 ஆம் தேதியில் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், பொது அதிகார முகவரான சாத்தப்பனுக்கு விபரங்கள் தெரியும் என்றும், மேலும் அவர் மனுதாரரின் கணவர் என்றும், அதனால் இந்த மனு அனுமதிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

3. <u>எதிர் உரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

மனுவில் கூறியுள்ள விபரங்கள் உண்மை அல்ல என்றும், அசல் வழக்கில் மனுதாரர் வ.சா.1 ஆகவும், மனுதாரரின் கணவர் வ.சா.2 ஆகவும் விசாரித்துப் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் சில ஆவணங்களைக் குறியீடு செய்யவேண்டுமென்று கூறி வ.சா.2 சாட்சியை மீண்டும் விசாரிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றும், இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வழக்கைக் காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்து உள்ளார் என்றும், மனுதாரர் அவரது சாட்சியத்திற்கு மாறாக தற்போது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் வேண்டுமென்றே சாட்சியம் அளிக்க வராமல் இருப்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உடல்நிலை சரியில்லை என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இம்மனுவிற்கு முகாந்திரம் இல்லாததால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

மனுதாரர் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து தொகையை வசூல் செய்வதற்கு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், மனுதாரருக்கு அதிக வயதான காரணத்தினாலும், நோயினாலும் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், மனுதாரர் சாத்தப்பன் என்பவரை பொது அதிகார முகவரை நியமித்து 19.09.2023ஆம் தேதியில் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், பொது அதிகார முகவரான சாத்தப்பனுக்கு வழக்கு விபரங்கள் நன்கு தெரியும் என்றும், மேலும் அவர் மனுதாரரின் கணவர் என்றும், அதனால் இந்த மனு அனுமதிக்க வேண்டுமென்று வாதிடப்பட்டது.

5.2 எதிர்மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் மனுதாரர் வ.சா.1 ஆகவும், மனுதாரரின் கணவர் வ.சா.2 ஆகவும் விசாரித்துப் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் சில ஆவணங்களைக் குறியீடு செய்யவேண்டுமென்று கூறி வ.சா.2 சாட்சியை மீண்டும் விசாரிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றும், இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வழக்கைக் காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்து உள்ளார் என்றும், மனுதாரர் அவரது சாட்சியத்திற்கு மாறாக தற்போது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் வேண்டுமென்றே சாட்சியம் அளிக்க வராமல் இருப்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உடல்நிலை சரியில்லை என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இம்மனுவிற்கு முகாந்திரம் இல்லாததால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று வாதிடப்பட்டது.

5.3 வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அசல் வழக்கில்

மனுதாரர் வாதியாக இருந்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் வ.சா.1 ஆகவும், அவரது கணவர் வ.சா.2 ஆகவும் முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வ.சா.2 ஐ மீண்டும் அழைத்து ஆவணங்கள் குறியீடு செய்ய கோரி இடைகால மனு 04/2023, 05/2023 மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பில் 19.09.2023 ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணத்தை இ.ம.எண்.06/2023 தாக்கல் செய்து அந்த மனுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த பொது அதிகார ஆவணத்தில் மனுதாரரின் பொது அதிகார முகவராக அவரது கணவர் நியமிக்கப்பட்டுள்ளார். மனுதாரரின் கணவரைத் தான் பொது அதிகார முகவராக இவ்வழக்கில் நியமிக்கக் கேட்டுள்ளார். மனுதாரரின் கணவர் அசல் வழக்கில் வ.சா.2 ஆக ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ளார். உரிமையியல் வழக்குகளில் கணவருக்குப் பதிலாக மனைவியோ, மனைவிக்குப் பதிலாகக் கணவரோ தரப்பினராக இருந்து அவர்களுக்கு மாற்றாக சாட்சியம் அளிக்கலாமென இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 120 ல் கூறப்பட்டுள்ளது. மனுதாரருக்கு அவரது கணவரே பொது அதிகார முகவராக இருப்பதாலும், மேலும் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள transaction அவருக்கு நன்கு தெரியும் என்று கூறப்பட்டுள்ளது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள transaction பொது அதிகார முகவருக்கு நன்கு தெரியும் என்பதாலும், இந்தப் பொது அதிகார முகவர் அசல் வழக்கில் ஏற்கனவே வ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மனுதாரருக்காக அவரது கணவரை மேற்கொண்டு இவ்வழக்கினை நடத்துவதற்கு பொது அதிகார முகவராக நியமிக்கும் பட்சத்தில் அசல் வழக்கின் தன்மை எதுவும் மாறப்போவது இல்லை. மேலும் அது புதிய வழக்கைத் தோற்றுவிக்க போவதும் இல்லை. மனுதாரரின் பொது அதிகார முகவருக்கு இவ்வழக்கு விவரங்கள் நன்கு தெரியும் என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மையோ, சூழ்நிலையோ மாறப்போவது இல்லை என்பதாலும் மேலும் புதிய வழக்கை தோற்றுவிக்காத காரணத்தினாலும் மனுதாரரின் வயது மற்றும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இவ்வழக்கினை மேற்கொண்டு அவரது பொது அதிகார முகவர் மூலமாக வழக்கை நடத்துவதில் எவ்வித கெட்ட எண்ணமோ, காலம் கடத்தும் எண்ணமோ இருப்பதாகத் தெரியவில்லை. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட போவது இல்லை என்பதால் இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

முடிவாக இம்மனு செலவு தொகை இல்லாமல் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு பின்பு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 22 ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,

ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

மு.கூ.சா.நீ., ஈரோடு.